## மெட்ரோ ரயில் முதல்கட்ட விரிவாக்கத் திட்டம்

# சில மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு பெயர்கள் மாற்றம்



(கோப்புப் படம்)

**சென்னை,அக்.7:** சென்னையில் மெட்ரோ ரயில் முதல்கட்ட விரிவாக்க திட்டப்பணிகள் நடந்து வரும் நிலையில், சில மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு பெயர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

சென்னை மாநகர போக்குவரத்து நெரிசலை குறைக்க மெட்ரோ ரயில் திட்டம் உருவாக்கப்பட்டது. மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் கட்டப்பணிகள் நிறைவடைந்து, சென்னை விமானநிலையம்-வண்ணாரப்பேட்டை முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல்-பரங்கிமலை வரை இரண்டாவது வழித்தடத்திலும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதைத் தொடர்ந்து வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூரை அடுத்து உள்ள விம்கோ நகர் வரை 9.051 கிலோ மீட்டர் தொலைவிற்கு விரிவாக்க திட்டப்பணிகள் ரூ.3 ஆயிரத்து 770 கோடி செலவில் நடந்து வந்தன.

முதல் கட்ட விரிவாக்கப் பணிகளில், சுரங்கப்பாதையில் சர். தியாகராயர் கல்லூரி, கொருக்குப்பேட்டை ஆகிய இரண்டு மெட்ரோ ரயில் நிலையங்களும், உயர்நிலை பாதையில் தண்டையார்பேட்டை, சுங்கச்சாவடி, தாங்கல், கௌரி ஆசிரமம், திருவொற்றியூர், விம்கோநகர் ஆகிய 6 மெட்ரோ ரயில் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது வரை 90 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளன. இதையடுத்து, வரும் டிசம்பரில் இந்த வழித்தடத்தில் பாதுகாப்பு ஆணையர் ஆய்வு செய்ய உள்ளார்.

இந்நிலையில், 8 மெட்ரோ ரயில் நிலையங்களில் ஒருசில குறிப்பிட்ட மெட்ரோ நிலையங்களுக்கு பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன. இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது: இந்த வழித்தடத்தில் தண்டவாளம், சிக்னல்கள், ரயில் நிலையங்கள் அமைக்கும் பணி இறுதி கட்டத்தை எட்டியுள்ளது.

இந்த வழித்தடத்தில் உள்ள ரயில் நிலையங்களில் கொருக்குப்பேட்டை ரயில் நிலையத்தின் பெயர் தண்டையார்பேட்டை என்று மாற்றப்பட்டுள்ளது. அதேபோல, ஏற்கெனவே உள்ள தண்டையார்பேட்டை ரயில் நிலையத்தின் பெயர் புது வண்ணாரப்பேட்டை என்றும், தாங்கல் ரயில் நிலையத்தின் பெயர் காலடிப்பேட்டை என்றும், கௌரி ஆஸ்ரமம் ரயில் நிலையத்தின் பெயர் திருவொற்றியூர் தேரடி என்றும் மாற்றப்பட்டுள்ளது.

இதற்கு முறையாக அரசும் அனுமதி அளித்துள்ளது. அந்தப்பகுதி மக்களுக்கு மிகவும் அறிமுகமான பகுதிகளாக இருப்பதற்காக இந்த பெயர் மாற்றம் செய்யப்பட்ட உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.